# தமிழர் போர் மூண்டு விட்டது.

## எதற்காக?
## தமிழுக்காக.

**தமிழர் தன்மானத்துக்காக**
**தமிழர் அறிவு, கலை, வீரம்**
**ஆகியவற்றிற்காக,**

எனவே

## தமிழா உன் கடமை என்ன?

மாதம் 75 ரூபாய் காசுக்கு எதிரியின் காலை நக்குவதா? அற்ப பதவிக்காக சகலத்தையும் உதிர்த்து தமிழை, தமிழனை, தமிழ் நாட்டை காட்டிக் கொடுத்து விட்டு வளையல் போட்டுக்கொண்டு முக்காடிட்டு மூலையில் குந்தி இருப்பதா? சிச்சி இது சிற்றினப் பிழைப்பல்லவா?

## மற்றென்ன உன் கடமை?

எதிரியின் கூட்டுறவைஒழி.
வீரத்துடன் வெளியில் வந்து மார்தட்டு.
கிளர்ச்சிப் போரில் முன்னணியில் நில்லு.
எதிரி வெட்கப்பட, அறிவு பெற, ஓடி ஒழிய உன் உயிர் விடத் தயாராகு.
இவை உன்னால் ஆகா விட்டால் காசு கொடுத்து ஆதரித்து நீ தமிழன் என்பதையாவது காட்டிக் கொள்.